15/02/2019 D.V.C. 1/2017 R.W.1 Ramesh

சாட்சி அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி (சத்தியபிரமாணம் செய்து வைக்

14.10.2013ம் தேதி திருமணத்திற்கு பிறகு துபாய்க்கு போனேன் என்றால் சரிதான். எனது மனைவி 29.05.2014 அன்று துபாய்க்கு வந்தார் என்றால் சரிதான். எனது அம்மா, அப்பா 2014 ஜுலை முதல் வாரத்தில் துபாய்க்கு வந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. எனது மனைவி துபாய்க்கு வந்த பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து எனது பெற்றோர்கள் வந்தார்கள் என்று ஞாபகமில்லை. எனது பெற்றோர் 10.08.2014 அன்று இந்தியாவிற்கு திரும்பி வந்தார்கள் என்றால் அது பற்றி ஞாபகமில்லை. எனது மனைவி துபாய்க்கு வரும் வரை எனது அம்மா, அப்பாவுடன் தான் இருந்தார் என்றால் சரியல்ல. அவரது வீட்டில் தான் இருந்தார். திருமணத்திற்கு பிறகு 10 நாட்கள் கழித்து எனது மனைவி தற்போது குழந்தை வேண்டாம் என்று சொன்னார். அதை நான் ஒத்துக் கொள்ளவில்லை. குழந்தை பிறப்பை தள்ளி போடுவதற்கு எந்த பாதுகாப்பு நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். குழந்தை வேண்டாம் என்று சொல்வதற்கு என்ன காரணம் என்று கேட்டேனா என்றால் குழந்தை வேண்டாம் என்று சொன்ன விசயம் எனக்கு பிடிக்காததால் அதற்கான காரணத்தை நான் கேட்கவில்லை. எனது மனைவியை பிடிக்காததற்கு அவர் குழந்தை வேண்டாம் என்று சொன்னது ஒரு காரணமல்ல. எனது லேப்டாப்பில் தனது பேஸ்புக் அக்கவுண்டை திறந்திருந்ததால் அவர் தனது தோழியோடு chat பண்ணியதை தெரிந்து கொண்டேன். பேஸ் புக் அக்கவுண்ட்டிற்கு பாஸ்வேர்டு இருக்குமென்றால் சரிதான். அது தெரிந்தால் தான் அந்த அக்கவுண்டை திறந்து பார்க்க முடியும் என்றால் சரிதான். லேப்டாப்பில் அந்த அக்கவுண்டை திறந்து வைத்திருந்தால் அதில் பாஸ்வேர்டு பதியப்பட்டிருக்கும். எனவே பாஸ்வேர்டு கொடுக்காமலேயே அக்கவுண்டை திறந்து பார்க்கலாம். அந்த பேஸ்புக் அக்கவுண்ட் மூடப்படாமல் இருந்ததால் நான் அதிலுள்ள விசயங்களை படித்து தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு திறந்திருக்கும் போது எனது மனைவி chat பண்ணுவது போல் நானும் பண்ணலாம் என்றால் சரிதான். அந்த லேப்டாப் தற்போது என்னிடம் இருக்கிறதா என்றால் அது கம்பெனி லேப்டாப், எனவே அது தற்போது என்னிடம் இல்லை. அது கம்பெனியில் தான் இருக்கிறது. எனது மனைவியின் முகநூலில் என்னென்ன பரிமாறப்பட்டிருக்கிறது என்பதை பதிவு செய்து பிரிண்ட் எடுத்து வைத்திருக்கிறேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு முதன்முதலில் எனது மனைவி எனது கம்ப்யூட்டரில் எப்போது எனது லேப்டாப்பில் தகவல் பரிமாற்றம் செய்தார் என்று எனக்கு தெரியாது. துபாயிலிருந்து இந்தியா வந்த பிறகுஎனது மனைவி அவரது தோழி ரோஸியோடு chat செய்தாரா அல்லது துபாயில் இருக்கும் போது chat செய்தாரா என்று ஞாபகமில்லை. எனது மனைவி கருவுற்ற பிறகு அவர் பரிசோதனைக்கு அழைத்து செல்லப்பட்டபோது எனது பெற்றோர், எனது சகோதரி உடன் சென்றார்கள் என்றால் சரிதான். எனதுமனைவிக்கு திக்குவாய் எதுவும் இல்லை. சரளமாக பேசுவார். எனது மனைவியிடம் எனக்கு பிடிக்காத விசயம் என்னவென்றால் அவரது ஈகோ. தான் தான் என்ற கௌரவம், அவருக்குஅடிபணிந்து நடக்க வேண்டும், எனது அப்பா, அம்மாவை விட்டுவிட்டு அவரோடு

இருக்க வேண்டும் என்று நினைக்கிறார். இந்த விவரத்தை எனது எதிருரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. திருமணத்தின் போது எனது மனைவிக்கு எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்று தெரியாது. கழுத்தில் என்ன நகை போட்டிருந்தார்கள் என்று தெரியாது. எனது பெற்றோருக்கு அது பற்றி தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு அது பற்றி எனது பெற்றோரிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. இந்த வழக்கில் தனக்கு எத்தனை பவுன் நகை போட்டார்கள் என்று எனது மனைவி சொல்லியிருக்கிறார் என்றும், அது பற்றியாவது நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. எனது மனைவி துபாய் வந்தபோது அவரது நகைகளை எங்கே வைத்துவிட்டு வந்தார் என்று தெரியாது. இன்று வரை எனது மனைவி அவரது நகைகளை எங்கே வைத்திருக்கிறார் என்று தெரியாது. எனது பெற்றோரிடம் இந்த வழக்கிற்கு பிறகு எனது மனைவி நகைகளை கொடுத்து வைத்திருக்கிறாரா என்று கேட்டேனா என்றால் கேட்டேன். எனது மனைவி தனது நகைகளை எனது தாயாரின் பீரோவில் வைத்திருக்கிறாரா என்று கேட்டேனா என்றால் கேட்டேன். எனது பெற்றோர் எனது மனைவியின் நகைகளை எங்களது வீட்டில் வைக்கவில்லை என்று சொல்லிவிட்டார். எனது மனைவிக்கு 10 பவுன் மட்டும் சீதனமாக நகை போட்டதாக முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த பவுன் என்ன நகை என்று ஞாபகமில்லை. இந்த 10 பவுன் என்னென்ன நகை என்று எனது பெற்றோரோ அல்லது வேறு யாருமோ என்னிடம் சொல்லவில்லை. நகை தவிர சீர்வரிசைப் பொருட்கள் எவ்வளவு மதிப்பிற்கு செய்தார்கள் என்று தெரியாது. திருமணம் முடிந்த பிறகு சீர்வரிசை பொருட்களை எனது அப்பா அம்மா வீட்டில் வைத்தார்கள் என்றால் சரிதான். சமூக நலத்துறையிலிருந்து 11.09.2015 அன்று ஆஜராக என்னிடம் காட்டப்படும் அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அது மனுதாரர் சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வந்தபோது நான் இந்தியாவிற்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். இந்த தேதிக்கு பிறகு தான் எங்கள் இருவரையும் சமூக நலத்துறையில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். சமூக நலத்துறையில் என்னோடு சேர்ந்து வாழ்வதற்காக தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனுவில் கண்ட விசயங்களை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அந்த மனுவில் நானோ, எனது பெற்றோரோ வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக சொல்லவில்லை என்றால் அது பற்றிய ஞாபகமில்லை. மனுதாரரின் ஈகோ காரணமாக நான் அவருடன் சேர்ந்து வாழமாட்டேன் என்று சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். எனது சார்பாக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தது வழக்கறிஞர் திரு.ராமமூர்த்தி என்றால் சரிதான். அந்த வழக்கு 5.08.2015 அன்று தாக்கல் செய்யப்பட்டு வாய்தா 22.09.2015 அன்று போடப்பட்டது என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

(ஓம். ரமேஷ்)

(Sd./-A.B. Naseer Ali,)
Judicial Magistrate, Musiri.